# கேள்வி:

# "நான் ஏன் புதிய ஏற்பாட்டு சபையின் உறுப்பினனாய் இருக்க வேண்டும்?"

# பதில்:

*நீங்கள் புதிய ஏற்பாட்டு சபையின் உறுப்பினராக இருக்க வேண்டுமென்றால், அதற்குச் சில தெளிவான மற்றும் வலிவான காரணங்கள் இருக்கவேண்டும். மற்றும், புதிய ஏற்பாட்டு சபையின் உறுப்பினராவதற்கு வலிவான காரணங்களில்லை என்பதாகச் சில கருத்துக்களை நீங்கள் ஆலோசித்துக் கொண்டிருந்திருக்கலாம்.*

## போதுமானதல்லாத காரணங்கள்

*சபையின் உறுப்பினராவதற்குத் தரப்படுகின்ற காரணங்கள் சில சமயங்களில் போதுமானதாக இருப்பதில்லை. நமது கர்த்தருடைய சபையானது சமுதாயத்தில் புகழ் பெற்றதாய் இருக்கிறது என்பதற்காக நீங்கள் அதில் உறுப்பினராகியிருந்தால், நீங்கள் கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுபவரல்ல. சில சமயங்களில் "ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்று" (அப். 2:47), கர்த்தருடைய சபையானது புகழ் பெற்றதாய் இருக்கிறது; ஆனால் பல சமயங்களில், துன்மார்க்கம் புகழ் பெற்றதாகி, நமது கர்த்தருடைய சபையானது கோபத்துடன் நோக்கப்படுகிறது. "உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது" (1 யோவா. 5:19) - எனவே, கர்த்தருடைய சபையின் தற்காலிகப் புகழ்ச்சிக்காக நீங்கள் அதை உங்கள் மதமாகத் தேர்ந்தெடுத்திருந்தால், நீங்கள் மோசமான வகையில் தகவல் பெற்றிருக்கிறீர்கள்.*

*உங்கள் வியாபாரத்திலோ அல்லது நிதி நிலைமையிலோ உதவியாயிருக்கக் கூடும் என்று நம்பி, நீங்கள் கிறிஸ்தவராகும்படி உந்தப்பட்டிருந்தால், நீங்கள் தவறான வழியில் எண்ணங்கொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட முயற்சி செய்யும் எவரும், எவ்வழியிலும் கிறிஸ்தவராக முடியாது; அவர்*

கீழ்ப்படிதலின் ஒரு அம்சத்திற்கு மாத்திரமே உட்பட முடியும். அவருடைய செயல்கள் மற்ற மக்களை ஏமாற்றலாம், தேவன் அவருடைய இருதயத்தின் நிலையை அறிகிறார். இப்படிப் பட்ட நோக்கங்களுடைய ஒரு நபருடைய பெயர் சபை வருகைப் பதிவேட்டில் சேர்க்கப்படுமேயன்றி, ஜீவபுஸ்தகத்தில் சேர்க்கப்படாது.

உணர்வுப் பூர்வமானதாயிருப்பினும்,உங்கள் உறவினர்கள் உறுப்பினராயிருப்பதால், நீங்களும் சபையில் உறுப்பினராகிறீர் கள் என்றால் அதுவும் போதுமானதல்லாத இன்னொரு காரணமாகும். உங்கள் தாயை நீங்கள் நேசிக்கவில்லை யென்றால், நீங்கள் இருக்க வேண்டியபடி இருக்கவில்லை என்றே பொருள். இருப்பினும், உங்களுக்காக மதரீதியான முடிவுகளை, அவர் தீர்மானிக்கும்படி விட்டால், "தாயை வணங்குதல்" என்ற மனிதரீதியான விக்கிரகாராதனையின் ஒரு அம்சமாகிவிடுகிறீர்கள். இயேசு என்ன கூறினார் என்று கவனியுங்கள்:

> *பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன். எப்படியெனில், மகனுக்கும், தகப்பனுக்கும், மகளுக்கும், தாய்க்கும், மருமகளுக்கும், மாமிக்கும் பிரிவினை யுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது, தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல (மத். 10:34-37).*

உங்கள் நண்பர் ஒருவர் அல்லது உங்கள் அன்புக்குரியவர் ஒருவர், "உங்களுக்கு சபை தேவை, சபைக்கு நீங்கள் தேவை" என்று கூறினால், அவர், பாதியளவுதான் சரியாகக் கூறுகிறார்- உங்களுக்கு சபை தேவை என்பது சரிதான்; ஆனால் தேவனு டைய சபைக்குத் தனிநபர் யாரும் தேவைப்படுவதில்லை. உங்கள் நகரில் உள்ள சபையில் உறுப்பினராவதன் மூலம் நீங்கள் சபைக்கு ஒரு நன்மை செய்வதாக நீங்கள் எண்ணினால், நீங்கள் கிறிஸ்தவராகத் தயாராகவில்லை என்றுதான் பொருள். இந்த எண்ணமானது, தேவனுடைய இராஜ்யத்தில் உள்ளவர் களுடைய பண்பாகிய தாழ்மையான நடக்கையிலிருந்து தூரத்திலிருக்கிறது. கிறிஸ்துவின் சபையானது நீங்கள் பிறப்பதற்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே

ஜீவிக்கிறது, நீங்கள் அதன் உறுப்பினராகாவிட்டாலும் அது தொடர்ந்து ஜீவிக்கும்.

## போதுமான காரணங்கள்

கிழக்குக்கும், மேற்குக்கும் உள்ளது போலவே, கிறிஸ்த வருக்கும் கிறிஸ்தவரல்லாதவருக்கும் இடையே உள்ள வேறு பாடு மிகப் பரந்ததாக இருக்கிறது. அந்த வேறுபாட்டை ஒரு சிறு அளவாவது நீங்கள் உணருகின்ற வேளையில், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சபையில் உறுப்பினரா வதற்கு ஒரு மணி நேரம் கூடத் தாமதிக்க மாட்டீர்கள்.

கீழ்க்கண்ட முரண்பாடுகளை ஆலோசனை செய்து பாருங்கள்:

| கிறிஸ்தவர்கள் | கிறிஸ்தவரல்லாதவர்கள் |
|---|---|
| ஐக்கியமுள்ள குடிமக்கள் | அந்நியர்கள் |
| தேவனுடைய சிநேகிதர்கள் | தேவனுடைய விரோதிகள் |
| பரிசுத்தவான்கள் | பாவிகள் |
| கிறிஸ்துவில் வாழ்கின்றவர்கள் | பாவத்தில் மரித்தவர்கள் |
| அவருடைய ஆச்சரியமான ஒளியில் இருக்கின்றவர்கள் | அந்தகாரத்தின் அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் |
| தேவனுடைய பாதுகாப்பில் இருக்கின்றவர்கள் | சாத்தானுடைய வல்லமை யின் கீழ் இருக்கின்றவர்கள் |

பாவத்தில் மரித்த நிலையில் இருத்தல் எவ்வளவு பயங்கரமானது! கிறிஸ்து இல்லாமல், தேவன் இல்லாமல், நம்பிக்கையில்லாமல் இருப்பது எவ்வளவு துன்பமானது! "கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும் படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும்" (சங். 39:4). அந்தகாரத்தின் வல்லமையின் கீழும், சாத்தானுடைய வல்லமையின் கீழும் நீங்கள் இருக்கின்றீர்கள் என்ற எண்ணமானது எவ்வளவு வெறுமையானது! எல்லாம் வல்ல தேவனுடைய பாதுகாப்பின் கீழ் நீங்கள் இருக்கின்றீர்கள் என்று அறிவது உங்களுக்கு அளிக்கும் பலத்தைக் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் கிறிஸ்தவரானால், கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருப் பீர்கள், நீங்கள் அங்கேயே இருக்க விரும்பினால், ஒருவரும் அவ் விடத்தை விட்டு உங்களை எடுத்துப்போட முடியாது.

இந்த வேறுபாடுகள், தேவனுக்குக் கீழ்ப்படியும்படி

உங்களை விரும்பவைக்கவில்லையெனில், தள்ளிவிடக் கடின மான மற்றும் சில காரணங்களும் இருக்கின்றன.

**நன்றியுடைமைக்காக**

வேறு எந்தக் காரணமும் இல்லையென்றாலும், நன்றியுடைமைக்காக நீங்கள் சிருஷ்டிகரைச் சேவிக்க வேண்டும். இரக்கமுள்ளவர் உங்களுக்குப் பிறப்பைக் கொடுத்தார் - அதைக் குறித்து நீங்கள் செய்ய வேண்டியது என்ன? பிறருடைய உணர்வுகளை மதிக்கின்ற ஒருவர் உங்களை இந்த மாபெரும் அழகிய உலகில் அன்புடன் வைத்தார் - அதைக் குறித்து நீங்கள் செய்துள்ளது என்ன? உங்களின் எல்லா சந்தோஷங்களும் ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து வருகிறது, அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை (யாக். 1:17). தேவனுடைய அப்பத்தை உண்டு, அவருடைய காற்றைச் சுவாசித்துக்கொண்டிருக்கும் நீங்கள் அவருக்கு முரண்பட்டுத் திரிய முடியுமா? சூரிய உதயத்தில் அவரது வரைகலையைக் கண்டு, காடுகளில் தேவனால் இயக்கப்படும் இசையைக் கேட்டுக்கொண்டு, தேவன் உங்களிடத்தில் கேட்பதைச் செய்யாமலிருக்கக் கூடுமா? தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தும், கிறிஸ்தவராகி அவருக்குக் கீழ்ப்படியாமலிருப்பது நன்றியுணர்வில்லாமையல்லவா? இவ்விதமாய் அவருக்குக் கீழ்ப்படிவது அவருக்கு "நன்றி" என்று சொல்லும் ஒரு சிறு வழியே ஆகும். அதற்குப் பின்புகூட அனைவரும் பிரயோஜனமற்ற ஊழியக்காரர்களாகவே இருக்கிறோம்.

இவ்வுலகப் பிரகாரமான அவருடைய ஆசீர்வாதங்களுக்கு நீங்கள் நன்றியில்லாதவர்களாய் இருந்து அவரைக் கவிழ்த்துப் போட்டால், மேசியாவின் இரத்தமயமான சிவந்த சரீரத்தை நீங்கள் காணும்பொழுது, அவரை இன்னும் உங்களால் புறக்கணித்துக் கொண்டிருக்க முடியாது. அவர் முகம் தளர்வுற்றும், அவருடைய சரீரம் இரத்தமயமாகவும் காணப் பட்டது ஏன்? அவர் என்ன தவறு செய்தார்? "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய அக்கிரமங்களைச் சுமந்தார்" (ஏசா. 53:4அ). உண்மையில், கிறிஸ்துவின் அன்பு உங்களைக் கட்டாயப்படுத்த வேண்டும்: "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்" (2 கொரி. 5:14). ஆகவே நீங்கள்

*உங்களுக்காக வாழாமல், உங்களுக்காக மரித்து மறுபடியும் உயிர்த்த அவருக்காகவே வாழ வேண்டும்.*

நன்றியுள்ள ஒரு இருதயமாக கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய நீங்கள் முன்வரவில்லையென்றால், வேறு எவருக்குமின்றி, கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ள ஐசுவரியமான ஆசீர்வாதங்களைப் பாருங்கள். தங்களை ஒப்புக்கொடுத்த பரிசுத்தவான்களைப் போலவே, பாவிகளும் சரீரத்திற்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுகின்றனர், ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் "பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்ட வர்களுக்கு" (1 கொரி. 1:2) மட்டுமே, அவருடைய சபை யாருக்கு மட்டுமே உரியதாகும். மனுஷ குமாரனை நீங்கள் வெளிப்படையாக எதிர்த்து நின்றபோதும், உங்கள் தோட்டத்தில் மழை பெய்யும், ஆனால் நீங்கள் கிறிஸ்தவராகும் வரையிலும், சுத்தமாக்கப்பட்ட, வெண்மையான ஆத்துமாவை நீங்கள் சந்தோஷமாய் அனுபவிக்க முடியாது: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (அப். 2:38அ). உங்கள் வாழ்நாட்களிலெல்லாம் நீங்கள் தேவனுக்கு விரோதியாய் இருந்தபோதிலும், சூரிய வெளிச்சம் உங்களை மகிழ்வித்து, உங்கள் வாழ்வை உற்சாகப்படுத்தும், ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு நீங்கள் கீழ்ப்படியாத வரை உங்களுக்குப் பரிசுத்த ஆவியின் வரம் என்றுமே கிடைக்கப்போவதில்லை. நீங்கள் துன்மார்க்கத்தில் இருந்துகொண்டே, உங்களுக்கென்று ஒரு நல்ல வீட்டைக் கட்டிக் கொள்ளலாம், ஆனால் ஆகாயங்களில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் அனைத்தும் தேவனுடைய மக்களுக்காகவே முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. நித்திய மானவைகள் யாவும் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரியதாகும். தோட்டங்கள் பட்சிக்கப்படுகின்றன, சூரிய ஒளியும் பலம் குன்றுகிறது, மற்றும் வீடுகள் பழையதாகின்றன; ஆனால் பாவங்களுக்கு மன்னிப்பும், பரிசுத்த ஆவியின் வரமும், அழியாத மகிமையின் நம்பிக்கையும் - ஆகிய இவைகள் என்றும் உள்ளதாக, எப்பொழுதும் புதியதாகவே இருக்கின்றன. உலகம் முழுவதிலும் முக்கியமானவைகள் இவைகளே, கிறிஸ்தவர்கள் மட்டுமே இவைகளை எப்பொழுதும் பெற்றிருக்க முடியும். தேவனுடைய பிள்ளைக்கு, மரண இருளின் பள்ளத்தாக்கு என்றைக்குமே பயங்கரமாய் இருப்பதில்லை. கிறிஸ்தவர் ஒருவர்

*கல்லறைக்குள் நடந்துசென்று, மரணத்தைப் பார்த்து நகைக்க முடியும், மேலும்: "மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?" (1 கொரி. 15:55) என்று இகழக் கூட முடியும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு - கிறிஸ்தவர்களாகிய நமக்கு-ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு தோத்திரம் (1 கொரி. 15:57).*

**இது வேத வசனத்தின்படியானது என்பதற்காக**

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையில் உறுப்பின ராயிருப்பதற்கு நானறிந்த சிறந்த காரணங்களில் ஒன்று, அதைப்பற்றி நான் வேதாகமத்தில் படிக்க முடியும் என்பதாகும். எனக்கு அது தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகிறது. தேவன் தமது பரிசுத்த புத்தகத்தில் குறிப்பிடாத ஒரு சபையில் உறுப்பினராக இருந்தால், அதைப்பற்றி நான் கவலைப்பட்டே யாக வேண்டும். நீங்கள் உறுப்பினராக உள்ள சபையைப்பற்றி யாரேனும் உங்களிடத்தில் கேட்டால், நீங்கள் வேத வசனத் தைத் திருப்பி, "நான் உறுப்பினராக உள்ள சபையைப்பற்றிக் கர்த்தர் இங்கு குறிப்பிட்டுள்ளார்'' என்று கூற முடியுமா? இயேசுவுக்குரிய சபையில் நீங்கள் இருந்தால் அப்படிச் செய்ய முடியும். மத்தேயு 16:18ல் இயேசு "என் சபை'' என்றுதான் கூறுகிறார். "என் சபைகள்'' என்று அவர் கூறாமல், "என் சபை'' என்று மட்டுமே அவர் கூறினார். வேத வசனங்களில் வெளிப் படுத்தப்பட்ட இவ்விதமான அமைப்பு ஒன்றே ஒன்றுதான் உள்ளது. இந்த வேதாகமத்தின்படியான அமைப்பில் இருக்க நான் விரும்புகிறேன். இது "தேவனுடைய சபை'' (அப். 20:28; 1 கொரி. 1:2) என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்தவர்களால் ஆகிய உள்ளூர்க் குழுக்கள் "கிறிஸ்துவின் சபைகள்'' (ரோமர் 16:16) என்று அழைக்கப்படுகின்றன. வேதாகமத்தில் விசேஷமாகக் குறிப்பிடப்பட்டுள்ள இந்த சபையில் நீங்கள் உறுப்பினராக விரும்புகிறதில்லையா?.[1] நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவனுக்கு முன்பாக நின்று, "கர்த்தாவே, பூமியிலே என் நாட்கள் முழுவதையும் வேதாகமத்தில் குறிப்பிடாத ஒரு சபையில் இருந்து கழித்தேன்'' என்று கூற எனக்கு மிகவும் அச்சமாயிருக்கும்.*

*இயேசு கட்டிய இச்சபை உலகளாவியது என்று சொன்னால், அதன் ஊழியத்தில் அது உலகளாவியதாயுள்ளது என்று பொருளாகும். பாவிகளுக்கு இது ஞானஸ்நானமளிப் பதை நடைமுறைப்படுத்துகிற வகையில் நமது கர்த்தருடைய*

*இச்சபை “பாப்திஸ்து” ஆக உள்ளது. வேதாகமத்தில் நீங்கள் படிக்கின்ற இந்த சபையானது சகலத்தையும் கிரமமாய்ச் செய்கிறதால் இது “மெதடிக்கல்லாக” உள்ளது. கிறிஸ்துவின் சபையில் “பிரிஸ்பைட்டர்களால்” (மூப்பர்கள்) ஆன ஒரு அரசாங்கம் உள்ளது. தேவனுடைய சபையானது சுயாதீனமுள்ளதாய், தங்கள் சொந்த விஷயங்களை தாங்களே நடத்துகிறதாய் இருப்பதால் அது* “congregational” *ஆகவும் உள்ளது. இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்ட இந்தப் புதிய ஏற்பாட்டு சபையில் ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்கள் (கிரேக்கம்: episcopoi) இருப்பதால் இது* “episcopalian” *சபையாகவும் உள்ளது. கர்த்தருடைய இந்த அமைப்பானது, அவருடைய வருகையை நிலையாக எதிர்நோக்குவதால்* “adventist” *ஆகவும் உள்ளது. இயேசுவின் சபை ஒரு சகோதர சபையாகும். அது ஐக்கியமுள்ள சகோதரர்கள் மற்றும் சகோதரிகளால் ஆனது. இது ஊழியப்பணியில் நம்பிக்கை வைத்துள்ளதால் “சுவிசேஷ” சபையாகவும் உள்ளது. இது நண்பர்களின் சமுதாயம் ஆகும். இது ஒரு “பரிசுத்தமான” சபையாகும். இது கிறிஸ்தவர்களால் ஆனது. ஆயினும், புதிய ஏற்பாட்டு சபை, மேற்சொன்ன எந்த ஒரு பெயராலும் அழைக்கப்படவில்லை. எனவே 1600 ஆண்டுக்கு முன்பு வரை தோன்றியிராத எந்தவொரு நாமகரணக் கூட்டத்தையும் இச்சபை அடையாளப்படுத்தாது.*

*ஆண்களாலும், பெண்களாலும் உண்டாக்கப்பட்ட அநேக நாமகரணக் கூட்டத்தார், தாங்கள் இயேசுவைச் சேர்ந்தவர்கள் என்று உரிமை கொண்டாடுகின்றனர். நான் இவை எவற்றிலும் உறுப்பினராக இல்லை, அவ்வாறு இருப்பதை நான் விரும்புவதுமில்லை. அவர்களுடைய ஆரம்பம் இப்பூமியில் உள்ளதாகும், அவர்களைப்பற்றி வேதாகமத்தில் விளக்கம் இல்லை, அவர்கள் நமது கர்த்தருடைய இரத்தத்தால் கிரயம் கொள்ளப்படவுமில்லை, இயேசுவின் இரத்தத்தால் கிரயம் கொள்ளப்பட்ட (அப். 20:28) சுத்தமான, நாமகரணமற்ற சபையைக் குறித்தே நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். வேதாகமத்தின் சுத்தமான மொழி நடையில், எந்த ஒரே ஒரு சபைக்காகக் கர்த்தர் மறுபடியும் வர இருக்கிறாரோ (எபே. 5:23) அந்த சபையைப்பற்றியே நான் விண்ணப்பம் செய்கிறேன்.*

**பரலோகத்தினால் இது வழிநடத்தப்படுகிறது என்பதற்காக**

பூமிக்குரிய தலைமையகம் எதுவும் சபைக்கு இல்லையென்பது, நான் இயேசுவின் சபையில் உறுப்பினராக இருப்பதற்கான மற்றொரு நல்ல காரணம் ஆகும். பவுல், ''நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் உள்ளது'' (பிலி. 3:20) என்று கூறினார். ஆகவே நான் கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராக இருந்தால், லேக் சிட்டி, உட்டா, போஸ்ட்டன், மசாசூட்ஸ் அல்லது ரோமாபுரி போன்ற நகரங்களிலிருந்து அறிவுறுத்தல்களை எதிர்நோக்கத் தேவையில்லை. கிறிஸ்து ஒருவரே அவரது சபையின் தலைவர் ஆவார். ஒவ்வொரு உறுப்பினரும் சபையில், "இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாய் எழும்புகின்றோம். அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்'' (எபே. 2:21, 22).

நான் கிறிஸ்துவின் சபையில் ஒரு உறுப்பினர், அந்த சபை அவருடைய சட்ட புத்தகத்தின்படி, இயேசுவுக்குரியதாகும். அவரே அதற்குத் தலைவர் (கொலோ. 1:18), அவருடைய சட்டமே அதை ஆளுகின்றது. அவருடைய ஆவியினால் ஏவப்பட்ட மனிதர்கள் புதிய ஏற்பாட்டை எழுதினர். இயேசு தமது சபைக்குப் புதிய ஏற்பாடு என்ற ஒரே ஒரு சட்ட நூலை மட்டுமே அளித்திருக்கிறார். மனித ஒழுங்குமுறை அல்லது விசுவாச அறிக்கை போன்றவைகளைக் கொண்ட ஒரு சபையில் நீங்கள் உறுப்பினராயிருந்தால், உங்கள் சபை, இயேசுவினுடைய சபையல்ல என்பது தெளிவு.

**இது நித்தியத்திற்கும் உள்ளது என்பதற்காக**

இயேசுவின் சபையில் நான் உறுப்பினராக இருப்பதற்கு மற்றொரு காரணம், இது அழிக்கப்பட முடியாதது என்பதாகும். எல்லா மனித அமைப்புக்களும், "வேரோடே பிடுங்கப்படும்" (மத். 15:13), ஆனால் பாதாளத்தின் வாசல்கள் கூட, சபையை மேற்கொள்ள முடியாது (மத். 16:18). எல்லாக் காலங்களினூடாகவும், முடிவற்ற உலகத்தில், இயேசுவின் சபை மூலமாக தேவன் மகிமைப்படுத்தப்படுவார் (எபே. 3:21).

**இது கிறிஸ்துவை இரட்சகராகக் கொண்டுள்ளது என்பதற்காக**

இயேசு கிறிஸ்துவின் சபையில் ஒருவர் உறுப்பினராக

*இருப்பதற்கு இதைவிடப் பெரிய காரணம் வேறொன்றும் இருக்க முடியாது: இதற்குப் புறம்பே, இரட்சிப்புக் கிடையாது. நாமகரணக் கூட்டங்களுக்குப் புறம்பே நீங்கள் இரட்சிக்கப்பட முடியும், ஆனால் வேதாகமத்தில் நீங்கள் படிக்கின்ற சபைக்குப் புறம்பே நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது. கிறிஸ்துவின் இரத்தமின்றி, நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது (மத். 26:28). இயேசுவின் ஒவ்வொரு துளி இரத்தமும் அவருடைய சபைக்குள் சென்றது (அப். 20:28). இயேசு மறுபடியும் ஒருநாளில் வருவார், ஆனால் தேவகோபத்தையும், பழிவாங்கு தலையும் அவரது சபைக்குப் புறம்பே இருக்கிறவர்கள்மேல் காண்பிக்கவே அவர் வருவார். அவருடைய சபைக்குள் இருந்தும், உண்மையற்றவர்களாய் இருப்பவர்களை முள்செடி களையும், முள்பூண்டுகளையும் எறிவதுபோல அவர் எறிந்து விடுவார், அக்கினிக்கு இரையாவதே அவர்களின் முடிவு என்பது உண்மையே (எபி. 6:8); ஆனாலும் அவரது சபைக்குப் புறம்பாக இருப்பவர்கள் ஒருவருக்காகிலும் இரட்சிப்பு இல்லை. அவருடைய சம்பத்தைச் சேர்க்க அவர் வரும்நாளிலே (மல்கி. 3:17), அந்த சம்பத்துகள், அவருடைய இரத்தத்தினால் நிறைந்த ஊற்றில் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரையும் உரிமைகோரிப் பெற்றுக் கொள்வதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கி றார்.இயேசுவே "சரீரத்தின் இரட்சகராய்" இருக்கிறார் (எபே. 5:23), அவரே "சரீரமாகிய சபைக்கு, எல்லாவற்றிற்கும் மேலான தலையாக" இருக்கிறார் (எபே. 1:22, 23).*

## *முடிவுரை*

*புதிய ஏற்பாட்டு சபையின் உறுப்பினராய் ஆவதற்குரிய நல்ல காரணங்கள் கணக்கில் அடங்காதவைகளாய் உள்ளன, கிறிஸ்தவர்கள்மேல் பொழியப்படுகின்ற ஆசீர்வாதங்கள் அளவற்றவைகளாய் உள்ளன. தேவன், உங்களுக்கு ஏற்கனவே கொடுத்துள்ள ஆசீர்வாதங்களுக்காக நீங்கள் நன்றியுள்ளவர் களாய் இருக்கிறீர்களா? அவர் ஸ்தாபித்த சபையைப்பற்றி நீங்கள் வேத வசனத்தில் வாசித்திருக்கிறீர்களா? அந்த சட்டத்தை, அந்த இரட்சகரை மற்றும் அந்த சபையின் நித்திய நிலையை உங்களுக்கு சொந்தமாக்கும் உரிமையை நீங்கள் கோரிப்பெற விரும்பினால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில்*

*நீங்கள் உறுப்பினராவதற்கு இதுவே தக்க சமயம்.*

*இயேசு கிறிஸ்துவை இரட்சகராகவும், தேவகுமாரனாகவும் நீங்கள் விசுவாசித்தால், பேதுரு செய்ததுபோல (மத். 16:16; ரோமர் 10:10ஐக் காண்க.) அதை அறிக்கை செய்ய இதுவே தக்க தருணம். கிறிஸ்துவுக்காக வாழ நீங்கள் விரும்பினால், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி (அப். 2:38), அவைகளை ஞானஸ்நானத்தில் கழுவிப்போட (அப். 22:16) இதுவே தக்க சமயம். புதிய ஏற்பாட்டு சபையில் உறுப்பினராவதற்குப் போதுமான காரணங்களை நீங்கள் பெற்றுக் கொண்டீர்களா?*

## குறிப்பு

*[1]வேதாகமத்தில் குறிப்பிட்ட சபைக்குப் பெயர் எதுவும் இல்லையென்பதே உண்மையாகும். "ஜானுடைய நாய்" என்று சொன்னால் நீங்கள் அந்த நாயினுடைய பெயரைச் சொல்லுவதில்லை. ''சாமின் மனைவி'' என்று நீங்கள் பேசும்போது, அப்பெண்மணியின் பெயரை நீங்கள் கூறுவதில்லை. அவருடைய கணவரின் பெயரையே நீங்கள் கூறுகிறீர்கள், ஆனால் அப்பெண்மணியின் பெயரை நீங்கள் குறிப்பிடுவதில்லை. "கிறிஸ்துவின் சபை" என்று நீங்கள் கூறினால், நீங்கள் சபைக்குப் பெயரிடுவதில்லை - சபை யாருக்குரியது என்று மட்டுமே நீங்கள் கூறுகிறீர்கள். இவ்விதமாக, வேதாகமத்தின் சபை, பெயரற்றதாக உள்ளது.*